**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்குதல் மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான – குழுக்களை ஏற்படுத்துதல்– தொடர்பாக

---

<u>சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 56 நாள். 14.08.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது ஆடி 29
படிக்கப்பட்டவை:–

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 13–01–2023 நாளிட்ட அறிவிப்பு.
2. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் நிதி மற்றும் மனித வள மேலாண்மை அவர்கள் 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட 29–03–2023 நாளிட்ட அறிவிப்பு.
3. அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 27–07–2022.
4. அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 13–01–2023.
5. அரசாணை (நிலை) எண்.33 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 07–06–2023.
6. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.3652/சஉதி–2(1)/ 2023, நாள். 16–05–2023, 31–05–2023 மற்றும் 28–07–2023.
7. அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ5) துறை, நாள். 03–08–2023.

------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 13–01–2023 நாளிட்ட அறிவிப்பில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ள நற்பயனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியர் பயன் பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஏனையவற்றிற்கிடையே 20.03.2023

தபிபா

அன்று முன்னாள் மாண்புமிகு அமைச்சர் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

*" முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ... வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள 30 ஆயிரத்து 122 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 18 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."*

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை) மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2022-2023 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக செயல்படுத்திட ரூ.33.56 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளுடன் சேர்த்து 433 மாநகராட்சி/நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 56,098 தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1-ல் விடுபட்ட ஒரு தொடக்கப் பள்ளியில் உள்ள 62 மாணவர்கள் என மொத்தம் 56,160 மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நெறிமுறைகளின் படியும் செலவின விகிதத்திலும் விரிவுபடுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023-2024-ஆம் நிதியாண்டில் அனைத்து அரசுக் பள்ளிகளிலும் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியருக்கு விரிவுப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடும் பொருட்டு சமூக நலத்துறை, நிதித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பள்ளிக் கல்வித் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், உணவு பாதுகாப்புத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை மற்றும் மின் ஆளுமைத்துறை (TNeG) போன்ற துறை அலுவலர்களை உள்ளடக்கிய மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு, மாநில/மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்புத் துறையான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ்

பணிபுரியும் மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (ஒகுவதி) ஆகிய அலுவலர்கள் தங்களது மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடர்பாக உரிய கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில், மாவட்ட கண்காணிப்புக் குழுக்களில் உறுப்பினர்களாக இடம் பெறுதல் வேண்டும் என்றும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு/கண்காணிப்புகுழு மற்றும் மாநில/மாவட்ட/பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அக்குழுக்களுக்கான கூட்ட நடைமுறைகள் ஆகியவற்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

7. சமூக நல ஆணையர் அவர்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தினந்தோறும் கண்காணிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் பணிபுரியும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவுத் திட்டம்) ஆகியோர்களுக்கு கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயம் செய்யுமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (E-5) துறை, நாள் 21.9.2015க்கு உரிய திருத்தங்கள் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலே 7-வதாக படிக்கப்பட்ட அரசாணையில் உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. சமூக நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு (1) மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு (2) மாநில அளவிலான கண்காணிப்புக்குழு (3) மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு (4) பள்ளி அளவிலான கண்காணிப்புக்குழு மற்றும் கூட்ட நடைமுறைகள் ஏற்படுத்தி ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்,
அரசு தலைமைச் செயலாளர், சென்னை.9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/முதலமைச்சரின் செயலாளர் -1 மற்றும் வளர்ச்சி ஆணையர், சென்னை.9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை.9.

அரசு செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சென்னை–9.

அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.

சமூக நல ஆணையர், சென்னை–15.

ஆணையர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6.

இயக்குநர், நகராட்சி நிர்வாகம், சென்னை–28.

இயக்குநர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28.

இயக்குநர், மின் ஆளுமை இயக்குநரகம், சென்னை.2

இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.

இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநரகம், சென்னை.6.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை.10.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை–7.

சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை.6.

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(சமூக நல ஆணையர், சென்னை–15 வழியாக).

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

அரசு முதன்மைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.

அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.

நிதித்துறை, சென்னை–9.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந2/சந6) துறை, சென்னை.9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. அதின் இஸ்மாயில்
14/8/2023
பிரிவு அலுவலர்

14/8/23

## இணைப்பு

**(அரசாணை (நிலை) எண். 56 , சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 14-08-2023)**

**1. மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு :**

| வ. எண் | அலுவலர் விவரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | வளர்ச்சி ஆணையர், | உறுப்பினர் |
| 3 | முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | உறுப்பினர் |
| 4 | முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, | உறுப்பினர் |
| 5 | முதன்மைச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |
| 6 | முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, | உறுப்பினர் |
| 7 | முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, | உறுப்பினர் |
| 8 | முதன்மைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை | உறுப்பினர் |
| 9 | செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, | உறுப்பினர் |
| 10 | நிருவாக இயக்குநர், மின் ஆளுகை | உறுப்பினர் |
| 11 | சமூக நல ஆணையர் | உறுப்பினர் செயலர் |

**வழிகாட்டுதல் குழு கூட்ட நடைமுறைகள்:**

i. வழிகாட்டுதல் குழு கூட்டம் ஆண்டுக்கு இரு முறை கூட்டப்பட வேண்டும்.

ii. திட்ட நெறிமுறைகள் மற்றும் திட்ட செயலாக்கம் குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல்.

iii. திட்டம் முழுமை அடைவதற்கான குறியீடுகளை நிர்ணயித்தல்.

iv. திட்டச் செயலாக்கம் மற்றும் கண்காணிப்புத் துறைகளை ஒருங்கிணைத்தல், திட்டத்தினை திறம்படச் செயல்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துரைத்தல்.

v. திட்டச் செயலாக்கம் தொடர்பான அனைத்து விவரங்களையும் ஆய்வு செய்து கண்காணித்தல்.

vi. திட்டத்தை செயல்படுத்தல், துறைகளுக்கிடையிலான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

(2) மாநில அளவிலான கண்காணிப்புக் குழு :

| வ. எண் | அலுவலர் விவரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1. | முதன்மை செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | தலைவர் |
| 2. | நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் | உறுப்பினர் |
| 3. | ஆணையர், பள்ளி கல்வித்துறை | உறுப்பினர் |
| 4. | இயக்குநர், நகராட்சி நிர்வாகம் | உறுப்பினர் |
| 5. | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் | உறுப்பினர் |
| 6. | மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் | உறுப்பினர் |
| 7. | இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | உறுப்பினர் |
| 8. | இயக்குநர், உணவுத்துறை | உறுப்பினர் |
| 9. | முதன்மை நிர்வாக அலுவலர் / தமிழ்நாடு மின் ஆளுகை முகமை | உறுப்பினர் |
| 10. | இணை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி | உறுப்பினர் |
| 11. | ஆணையர், சமூக நல ஆணையரகம், | உறுப்பினர் செயலாளர் |

**கூட்ட நடைமுறைகள் :**

i. கண்காணிப்புக் குழு கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.

ii. திட்டத்தின் சேவை வழங்குவதில் சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துரைத்தல்

iii. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கான தேவைகளை பரிசீலித்தல்.

iv. திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து விஷயங்களையும் மதிப்பாய்வு செய்து கண்காணித்தல்.

v. திட்டத்தை செயல்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

vi. மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவிற்கு அவ்வப்போது அறிக்கை அளித்தல்.

**3) மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு :**

| வ. எண் | அலுவலர் விவரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2. | மாநகராட்சி ஆணையர் | உறுப்பினர் |
| 3. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 4. | திட்ட அலுவலர், மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | உறுப்பினர் |
| 5. | மாவட்ட சமூக நல அலுவலர். | உறுப்பினர் |
| 6. | மாவட்ட திட்ட அலுவலர், ஒருவதி | உறுப்பினர் |
| 7. | கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் | உறுப்பினர் |
| 8. | நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் | உறுப்பினர் |
| 9. | மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர். | உறுப்பினர் |
| 10. | மாவட்ட அலுவலர், மின் ஆளுகை | உறுப்பினர் |
| 11. | மாவட்ட வழங்கல் அலுவலர் | உறுப்பினர் |
| 12. | உதவி இயக்குநர் ஊராட்சி | உறுப்பினர் |
| 13. | உதவி இயக்குநர் பேரூராட்சி | உறுப்பினர் |
| 14. | நகராட்சி ஆணையாளர் | உறுப்பினர் |
| 15. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) | உறுப்பினர் செயலர் |

**கூட்ட நடைமுறைகள் :**

i. கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.

ii. திட்டத்தின் சேவை வழங்குவதில் மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துரைத்தல்.

iii. மாவட்ட அளவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கான தேவைகளை பரிசீலித்தல்.

iv. திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும்மதிப்பாய்வு செய்து கண்காணித்தல்.

v. திட்டத்தை செயல்படுத்தும் போது மாவட்ட அளவில் ஏற்படும் இடையூறுகளை களைய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

vi. மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவிற்கு அறிக்கை அளித்தல்.

**4) பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழு :**

| வ. எண் | அலுவலர் விவரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1. | சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் | தலைவர் |
| 2 | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்/ பிரதிநிதிகள் (இருவர்) | உறுப்பினர் |
| 3 | சம்மந்தப்பட்ட பள்ளியின் காலை உணவுத் திட்ட பொறுப்பாளர், சுய உதவிக் குழு சார்ந்தவர் | உறுப்பினர் |

**கூட்ட நடைமுறைகள் :**

i. நாள்தோறும் காலை உணவு குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் வழங்குவதை கண்காணித்து உறுதி செய்தல் வேண்டும்.

ii. சமைப்பதற்கு முன்பு சமையல் பாத்திரங்கள் சுத்தமாக இருப்பதையும் மற்றும் மாணவ/மாணவியர் உணவு உண்ண பயன்படுத்தப்படும் தட்டு மற்றும் டம்ளர் தூய்மையான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

iii. உணவை மாணவ/மாணவியர்களுக்கு வழங்குவதற்கு முன்பு சுவைத்துப் பார்த்து அதன் பின்பு வழங்க வேண்டும்.

iv. உணவு பொருட்கள் பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

v. நாள்தோறும் சரியான நேரத்தில் தகவல்கள் செயலியில் பதிவேற்றம் செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.

vi. வாரம் ஒருமுறை குழுக்கூட்டம் நடத்தி திட்டம் செம்மையாக நடைபெறுதல் தொடர்பாக கலந்து ஆலோசித்து தங்கள் பரிந்துரை/கருத்துக்களை சம்பந்தப்பட்ட வட்டார / நகராட்சி / மாநகராட்சி அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டும்.

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

அ. அதன் இவாஞ்ஜலின்
14/08/2023
பிரிவு அலுவலர்

14/8/23